**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-06032022-4638

Volume: 6

Issue: 3

Month: January

Year: 2022

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 07.11.2021

Accepted: 20.12.2021

Published: 01.01.2022

Citation:
Vasumathi, V. "Bharathanenum Panbalan." *Shanlax International Journal of Tamil Research,* vol. 6, no. 3, 2022, pp. 137–44.

DOI:
https://doi.org/10.34293/tamil.v6i3.4638

*Corresponding Author:
vasumathiudt@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Bharathan Enum Panbalan

**Dr. V. Vasumathi**
*Associate Professor, Tamil Department*
*Sree G.V.G. Visalakshi Girls College (Autonomous), Udumalai*
http://orcid.org/0000-0002-5279-8881

**Abstract -** Bharathan is a classic story that takes place in Kambaramayanam. He is the reflection of the attribute. Attribute is quality. That is why the 'Neithalkali' glorify the character as "Panpendpaduvathu Padarinthu Ozhugal". As pointed out, the purpose of this article is to examine the events of Bharathan's life as an expression of that character.

**Keywords:** Tamil Literature, Kamparamayanam, Bharathan, Neithalkali, Ayodhya, Ramayana, Kalithogai, Purananuru, Thirukkural.

**References**

1. Kambar. 2006. Kambaramayanam, Balakandam, Ayodhyakandam and the Yuthakandam, Vai.Mu. Gopalakrishnamachariyar (Text), Chennai, Uma Pathipagam.
2. Ganasambanthan, 1996. Kamban Edutha Muthukkal, Chennai, Varthamanan Pathipagam.
3. Thiruvalluvar. 2014. *Thirukural*, Chennai, Sharda Pathipagam.
4. Kalithogai. 2011. Chennai, New Century Book House, ISBN: 978-81-234-0848-4.
5. Purananooru. 2011. Chennai, New Century Book House, . ISBN: 978-81-234-0848-4.

# பரதன் எனும் பண்பாளன்

*முனைவர் வி. வசுமதி*
இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை
ஸ்ரீஜி.வி.ஜி. விசாலாட்சி மகளிர் கல்லூரி (தன்னாட்சி)
உடுமலை

***ஆய்வுச் சுருக்கம்***

*கம்பராமாயணத்தில் இடம்பெறும் உன்னத கதைமாந்தர் பரதன். பண்பின் இருப்பிடமாய் பிரதிபலிப்பவன். பண்பு என்பது குணம். பண்பின் பெருமையை நெய்தல் கலி "பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகல்" என்ற சுட்டுகிறது. பண்பின் வெளிப்பாடாக, பரதனின் வாழ்க்கையில் இடம்பெறும் நிகழ்வுகளை அடிப்படையாகக்கொண்டு ஆய்வது இக்கட்டுரையின் நோக்கம்.*

***முக்கியச் சொற்கள்:*** *தமிழிலக்கியம், கம்பராமாயணம், பரதன், நெய்தல்கலி, அயோத்தி, இராமாயணம், கலித்தொகை, புறநானூறு, திருக்குறள்.*

## பரதனின்பிறப்பு

அயோத்தியின் அரசன் தசரதன். அவனுடைய நீண்ட நாள் வருத்தம் குழந்தைப் பேறின்மை. இதனை நீக்கும் படியாக யாகம் ஒன்றினை வசிட்டனின் வாக்கிற்கிணங்க செய்கிறான். யாகத்தின் வழி பெற்ற அமுதத்தை அவன் பட்டத்தரசிகள் மூவரும் பங்கிட்டு உண்ண, இராமன், பரதன், இலக்குவன், சத்ருக்கனன் பிறந்தனர். இவர்களின் பிறப்பைத் திருமாலின் பிறப்பாக, வளையொடு திகிரியும் வடவை தீதரவிளை தருகருவுடை விரிகொள் இளைஞர்கள்.(பாலகாண்டம்,திருவதாரப்படலம், பா.எண் - 22) என்று கம்பர் கூறுகிறார். வை.மு.கோ. தம் உரையில் பரதன் திருமாலின் சக்ர அம்சமாக அவதாரம் செய்திருப்பதை உறுதிப்படுத்துகிறார்.

நமது சங்கு சக்கரங்களும் திருவனந்தாழ் வானும் நமக்குத் தம்பியராயமைய, நாம் அயோத்தியில் தசரத சக்கரவர்த்திக்குப் புத்திரனாய் பிறப்போம் - (பாலகாண்டம் - வை.மு.கோ. (உரை), ப.எண் - 143) என்று விளக்கம் தருகிறார். இதன்வழி, திருமால்-இராமன், சங்கு-சத்ருக்கனன் சக்கரம்-பரதன் திருவனந்தன்- இலக்குவன் என்பது பெறப்பட்டது. பரதனின் பிறப்பு மற்றும் நட்சத்திரமும் பற்றிக் கம்பர் கூறுகையில்,

> **ஆசையும் விசும்பு நின்ற மரரார்த்தெழ**
> **வாசவன் முதலினோர் வணங்கி வாழ்த்துறப்**
> **பூசமும் மீனமும் பொலிய நல்கினாள்**
> **மாசறுகேகயன் மாதுமைந்தனை-**
> ***(பாலகாண்டம், திருவதாரப்படலம், பா.எண். 104)***

என்கிறார். இதன்வழி பரதன் அட்டவசுக்களின் தலைவனாக, பூச நட்சத்திரமும், மீனலக்கினமும் கொண்ட சுப ஓரையில் கைகேயி பெற்றெடுத்தாள் என்பது வெளிப்படுகிறது. இராமன் மட்டுமல்ல பரதனும் அட்ட வசுக்களின் தலைவனாகப் போற்றப்படுகிறான். வசிட்ட முனி குழந்தைகளுக்குப் பெயர் வைக்கும்போது,

***மற்றைய வொளியைப் பரதன் எனப்பண்ணினான்***

***(பாலகாண்டம், திருவதாரப்படலம், பா.எண்- 120)***

என்று கம்பர் காட்டுகிறார். கருமை நிறம் கொண்ட இராமன் பிறந்த பின் பரதன் பிறக்கிறான். அவனும் இராமனின் நிறத்தை ஒத்து இருக்கிறான் என்பது தெளிவாகிறது. பரதனின் வளர்ப்பும் திருமணமும் அயோத்தியின் இளவல்களாக வலம் வரும் குமாரர்கள் நால்வரில் இராமனும் இலக்குவனனும் இணைபிரியாமல் வளர, பரதனும்சத்ருகனனும்இணைபிரியாது வளருகின்றனர். இதனை,

***பரதனும் இளவலும் ஒரு நொடிபகிராது***

***(பாலகாண்டம், திருவதாரப்படலம், பா.எண் -130;)***

என்ற அடிகளில் காண முடிகிறது.

குருகுலக்கல்வி முடிந்து நால்வரும் அரண்மனையை அடைகின்றனர். தசரதன் இராமனுக்கு முடி சூட்டிட மனத்தில் நினைக்கின்றான். இத்தருணத்தில் விசுவாமித்திரர் யாகப் பாதுகாப்பிற்காக தசரதனிடம்,

***"நின் சிறுவர் நால்வரினும் கரிய செம்மல் ஒருவனைத் தருதி"***

***(பாலகாண்டம், கையடைப்படலம், பா.எண் -10)***

எனக் கேட்கின்றார். தசரதன் வேறு யாரையும் நினைக்காது உடனே இராமனை மட்டுமே நினைவில்கொண்டு விசுவாமித்திரருடன் அனுப்பி வைக்கிறான்.

தாடகை வதத்திற்குப்பின் இராமன் மிதிலை அடைந்து, வில் உடைக்க சீதா பிராட்டியுடன் திருமணம் முடிவு செய்யப்படுகிறது. இச்சூழலில் சனகன் தசரதனுக்குத் திருமண ஓலையை விடுக்கிறான். தசரதனின் வரவுக்குப் பின் சனகனின் இளையமகள் ஊர்மிளையை இலக்குவனனுக்கும், சனகனின் தம்பி; குசத்துவனின் மகள் மாண்டவியைப் பரதனுக்கும், சுருத கீர்த்தியைச் சத்ருகனுக்கும் மணம் முடித்து வைக்கின்றனர். இச்செய்தி,

***கொய்ந் நிறைதாரன் குசத்து வசப்பேர்***
***நெய்ந்நிறை வேலவன் மங்கையர் நேர்ந்தார்***
***மைந்நிறை கண்ணியர் வானுறை நீரார்***
***மெய்ந்நிறை மூவரை மூவரும் வேட்டார்***

***(பாலகாண்டம், கடிமணப்படலம், பா.எண்-102)***

என்ற இப்பாடலில் காட்டப்படுகிறது. இவ்விழா மிதிலையில் சிறப்புடன் நடைபெற்றது.

## பரதனின் பண்பு வெளிப்படும் இடங்கள்

### 1. தந்தையின் வாக்கைத் தட்டாதவன்

இராமனுக்குப் முடி சூட்டிட நினைத்த தசரதன், அதனை நிறைவேற்ற எண்ணம் கொள்கிறான். அத்தருணம் திருமணம் முடித்த தருணமாயினும் தசரதனின் வாக்கிற்கு இணங்க பரதனையும், சத்ருக்கனனையும் பரதனின் பாட்டனாரின் வீட்டிற்குச் (கேகய நாட்டிற்கு) சென்று வர ஆணை பிறப்பிக்கிறான். "தனக்கு சூழ்ச்சி செய்கிறானா தந்தை!" என்பதை உணராத பரதன் தன் அண்ணன் இராமனை வணங்கி "உயிர் பிரிந்து உடல் செல்வது போவது" போல் பிரிகிறான். இதனைக் கம்பர்,

***ஏவலுமிறைஞ்சிப்போயிராமன்சேவடிப்***
***பூவினைச்சென்னியிற் புனைந்து போயினான்***
***ஆவியங்கவனலதில்லையாதலால்***
***ஓவலிலுயிர்பிரிந்துடல்சென்றென்னவே***

***(பாலகாண்டம், பரசுராமபடலம், பா.எண்-48)***

என்கிறார். இக்காட்சியினை அ.ச.ஞானசம்பந்தன், தன் எண்ணத்திற்குத் தடையாக இருக்கக் கூடியவன் யார் என்று சிந்தித்து, பரதனை அப்புறப்படுத்திவிட்டுத் தசரதன் மந்திராலோசனை நடத்துகிறான். மந்திரா லோசனையின் முடிவில் தசரதனுடைய மனக்கருத்துகளை அனைவரும் ஏற்றுக்

கொள்கின்றனர் (ஞானசம்பந்தன்.அ.ச, கம்பன் எடுத்த முத்துக்கள், ப.எண்-61). இதனால் தசரதன் தன் மகன் பரதனுக்கு சூழ்ச்சி இழைப்பினும் அதனை உணர்ந்தாலும் தந்தையை மதிக்கும் பண்பினின்று மாறவில்லை.

**எந்நிலையிலும்தன்னிலைமாறாதிருப்பவன்**

பரதன் கேகய நாட்டிற்குச் சென்ற தருணத்தில் கைகேயி தன் தோழி மந்தரையின் சூழ்ச்சியால் பரதனுக்கு நாடாளும் உரிமையைப் பெறுகின்றாள். தவிர்க்க முடியாத வரங்களால் தசரதனும் இராமனைக் கானகம் விடுத்து, பரதனுக்கு நாட்டைத் தர முடிவு செய்கின்றான். இராமனிடமும் இச்செய்தி கூறப்படுகிறது. இராமனுக்கு ஆட்சி மறுக்கப்பட்ட போது மனம் வெதும்பிய இலக்குவனன், தன் அண்ணனான பரதனை,

> ***மின்னுடன் பிறந்த வாட் பரதவேந்தற்கென்***
> ***மன்னுடன் பிறந்திலென்மண் கொண்டாள்கின்ற***
> ***தன்னுடன் பிறந்திலென்றம்பி முன்னலென்***
> ***என்னுடன் பிறந்தயான் வலியனென்றியால்***
> ***(அயோத்தியாகாண்டம், தைலமாட்டுப்படலம், பா.எண் 45)***

என இழிவாகக் கூறுகின்றான். மண் கொண்டு ஆள வந்த பரதன் எங்களுடன் பிறக்கவில்லை என முழக்கமிட்ட இலக்குவனனின் வார்த்தையால் பரதன் இழிவுக்குள்ளாகுகிறான். இலக்குவனனின் சொற்களால் இழிவுக்குள்ளானாலும் பரதன் தன் தம்பியைக் கடிந்துகொள்ளாமல் அமைதியாக நிற்கிறான். தந்தையின் சூழ்ச்சியும் தாயின் சாமர்த்தியமும், தம்பியின் வார்த்தைகளும் பரதனைச் சுட்டபோதும் தன்னிலை திரியாத பரதனின் பண்பு வெளிப்படுகிறது.

**உறவினைப் பேணும் மேன்மையாளன்**

தசரதனின் மரணத்தைப் பரதனுக்கு அறிவிக்க ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. செய்தி சொல்ல சென்ற தூதுவனிடம் பரதன் தன் தந்தை தசரதன், இராம, இலக்குவனர்களைப் பற்றி நலம் விசாரிக்கிறான்.

> ***தீதிலன்கொல்திருமுடியோன்***
> ***(அயோத்தியா காண்டம், பள்ளிப்படைப்படலம், பா.எண்-2)***

இராமன்மீது கொண்ட பக்தியின் மேம்பாடாகப் பரதன் செயல்படுகிறான்,

> ***உலைவில்செல்வத்தனோவெனவுண்டத்***
> ***தலையிலேந்தினன்றாழ்தடக்கைகளே***
> ***(அயோத்தியா காண்டம், பள்ளிப்படைப்படலம், பா.எண்-3)***

என்புழி தன் கைகளைத் தலைமேல் தூக்கி இராம இலக்குவனர்களைத் தொழுகின்றான். தூதுவன் கொடுத்தத் திரு முகத்தைப் பக்தியொடு தன் சிரத்தில் தூக்கிவைத்து அதற்கு மலரிட்டுப் பிரிக்கின்றான். இச்செயல்பாடு பரதன் தன் தந்தையிடமும் குடும்பத்தாரிடமும் வைத்த மரியாதையையும்அன்பினையும்காட்டுகிற பண்பாக அமைகிறது.

**இராமனை ஒத்து விளங்குபவன்**

திருமுகம் கண்ட அடுத்த வினாடி நாள், ஓரை ஏதும் குறிக்காது உடனே அயோத்தி புறப்படுகின்றான் பரதன். ஏழு நாட்கள் பயணத்திற்குப் பிறகு அயோத்தி வரும் பரதன் காணும் காட்சிகள் பொலிவின்றி உள்ளதை உணர்கின்றான். அரசனைக் காணாது நேரடியாகத் தாயைச் சந்திக்கச் செல்கின்றான். “சத்தியம் நிறைவேற்றிய புத்திர சோகத்தினால் இறந்தான் தசரதன்” என்பதைத் தாயின் வாயிலாக அறிந்த பரதன், தன் காதில் கை வைத்து, புருவம் குனித்து சோகத்தின் வெளிப்பாடாகக் கூத்திடுகின்றான். இராமனுக்கு அஞ்சி

கைகேயியைக் கொல்லாது விடுத்து, கோசலையிடம் சென்று புலம்புகின்றான். கோசலையிடம் பரதன்,

1. எனக்கு நரகம் கிடைக்கட்டும்
2. பழி உண்டாகட்டும்
3. பாவியாவேன்
4. தீக்கதியில் சென்று விழுவேனாக

என்ற சபதங்களைச் செய்கிறான். தன்னைக் குறித்து மட்டுமே செய்யும் சபதங்களால் பரதன், இராமன் மீது கொண்ட அன்பெனும் பண்பு வெளிப்படுகிறது. கோசலை தன் முலைகளில் பால் சுரக்க பரதனை நோக்கி, முன்னை நுங்குல முதலுளோர் கடாம்

***நின்னையாவரே நிகர்க்கு நீர்மையார்***
***மன்னர் மன்னவா!***
***(அயோத்தியாகாண்டம், பள்ளிப்படைப்படலம், பா.எண் - 120)***

என்று மனதார வாழ்த்துகின்றாள்.

### தாயைக் கடிந்து கொள்பவன்

கேகய நாட்டிலிருந்து வந்த பரதன் பொலிவின்றி நின்ற அயோத்தியைக் காண்கிறான். உடன் வந்த சத்ருக்கனனும் "லட்சுமிதேவி ஊரைவிட்டுச் சென்றது போல்" நாடு உள்ள நிலையைப் பரதனுக்குக் கூறுகிறான். ஆங்கு கைகேயியின் அழைப்பு வருகிறது. தாயிடம் சென்ற பரதன் தந்தை முதலியோரின் நலம் விசாரிக்கிறான். கை கேயி வானகம் சென்ற தசரதனைக் குறித்துக் கூறுகிறாள். மேலும் நீ வருந்தாதே எனவும் ஆறுதல் மொழி கூறுகிறாள். அது கேட்டுப் பெருந்துயரம் அடைந்த பரதன் தாயைக் கடிந்து கொள்கிறான். தசரதன் "இராமனுக்கு முடி சூட்டலைக் காணாது போதியோ!" எனப் புலம்புகிறான். ராமனைக் காண முடிவெடுக்கிறான். "இராமன் வராது என் மனத்துயர் ஆறாது" -என்புழி கானகம் செல்ல புறப்படுகிறான்.தந்தை வாக்கை மதிப்பவன் முன்னதாக தசரதனின் உடலைக் கண்ட பரதன் தந்தைக்குரிய ஈமக்கிரியைகளைச் செய்ய முற்படுகிறான். அவனைத் தடுத்த வசிட்டன், அன்னை தீமையால் அரசன் நின்னையும் துன்னு துன்பத்தால், துறந்து போயினன், முன்னரே (அயோத்தியாகாண்டம், பள்ளிப்படைப்படலம், பா.எண்-132) என மகன் என்னும் உரிமையைத் தசரதன் பரதனுக்குத் தராமல் சென்றுவிட்டதைத் தெரிவிக்கின்றான். எள்ளல்தன்மையில் நின்ற பரதன் சிரிக்கின்றான். தன் தாய் செய்த செயல் தனக்கு இப்படிப்பட்ட மனவேதனை தரும் செயலாக மாறி நின்றமையை நினைத்து ஏங்கி அழுகின்றான். அது மட்டுமின்றி,

1. இப்படி ஒருவர் எம் சூரிய குலத்தில் உதித்த வருண்டோ?
2. சிறு வயதிலேயே பொல்லாத தீங்குற்றேன்
3. தரமற்றவனாவேன்

என்று தன் சிந்தை கலங்கி நிற்கின்றான். தசரதன் இராமனிடம் கொண்ட பாசத்தால் பரதனைப் பாட்டனாரின் வீட்டிற்குச் செல்ல வைத்ததும், கைகேயியின் சூழ்ச்சி வஞ்சனையால் நிலை தடுமாறி நிற்பதுவும் பரதனை வைத்துப் பெரியோர்கள் செய்த செயல். இதில் யாதொரு பங்கும் பரதனைச் சாராது. இத்துணை துன்பமான சூழலிலும் பரதன் தன் தந்தைக்கு ஈமக்கிரியைகள் செய்ய முற்படுகிறான். அதற்குரிய வாய்ப்பு மறுக்கப்பட்டபோது தனக்குத்தானே மனம் வெதும்பி அழுகிறான். அரிதற்கரிய பரதனின் கையால் ஈமக்கிரியைகள் பெறாதது தசரதன் பெறத்தவறிய வாய்ப்பு ஆகும். இவ்வுன்னதமான பரதனின் உயரிய பண்பைச் சுட்டிக்காட்டும் விதமாக, அ.ச.ஞானசம்பந்தனும், தசரதனுக்கு நீர்க்கடன் செய்ய பரதனுக்கு வாய்ப்பில்லை என்று கூறுவதைக் காட்டிலும், பரதன் கையால் நீர்க்கடன் பெறுகின்ற வாய்ப்பைத் தசரதன் இழந்து விட்டான்

என்று கூறுவதே முற்றிலும் பொருத்தமாகும் (ஞானசம்பந்தன்.அ.ச., கம்பன் எடுத்த முத்துக்கள், ப.எண்-65) என்கிறார். தந்தை இறந்தாலும் அவரின் வாக்கினை மதிக்கும் பரதனின் திறம் ஈண்டு வெளிப்படை.

### ஆயிரம் இராமனுக்கு ஒப்பானவன்

இராமனை அழைத்து வரப் புறப்படும் பரதன் தன்னைத் தனியாகப் பார்த்தால் திரும்ப வரமாட்டான் எனும் எண்ணத்தால் தானையுடன் கானகம் செல்கின்றான். சுமந்திரனின் வழிகாட்டுதலில் பரதன் காட்டு வழிப்பயணத்தை மேற்கொள்கின்றான். வழியில் படகோட்டியான குகன், பரதனைப் பார்த்து தவறாகப் புரிந்து கொள்கிறான். ஆட்சியைப் பிடித்தது மட்டுமின்றி இராமனுடன் போரிடும் எண்ணத்துடன் வரும் இவர்களை அழித்து விடுவதாகச் சூளுரை செய்கிறான். மேலும் இச்செயலைச் செய்யாவிடின் உலகம் தன்னை "நாய்குகன்" எனக் கூறும் அவலத்தையும் எண்ணி தன் படைகளைத் தயாராக்குகிறான்.

**குன்றெழுந்து சென்ற தெனக் குளிர் கங்கைக் கரை குறுகி**
**நின்றவனை நோக்கினன் திருமேனி நிலையுணர்ந்தான்**
**(அயோத்தியாகாண்டம் - குகப்படலம் - பா.எண்-28)**

குகன். பரதனின் கோலத்தைக் கண்டு; தான் சொன்ன இழிவுமொழிகளை எண்ணி வெட்கமடைகிறான். மேலும், பரதனை,

**ஆயிரம் இராமர் நின்கேழ் ஆவாரோ!**
**(அயோத்தியாகாண்டம், குகப்படலம், பா.எண்-35)**

என இராமனைவிட ஆயிரம் மடங்கு உயர்த்திக் காட்டுகிறான். இராமனின் ஒத்த பண்புகளைப் பரதனிடம் கண்ட குகன் வியப்படைந்தான். குகன் தன் நாவாயினால் பரதன் கங்கையைக் கடந்து பரத்துவாச முனிவருடன் சித்திரக்கூடம் அடைய உதவி புரிந்தான்.

### அவமானங்களைப் பொறுத்துக் கொள்பவன்

சித்திரக்கூடத்தில் பரதனின் வரவைக் கண்ட இலக்குவன், இராமனிடம்,

1. பரதன் தீங்கு செய்ய வருகிறான்
2. துரோகி
3. இராஜ்ஜியத்தைப் பிடுங்கிட வருகிறான்

என இழிவாக ஏசுகிறான். ஆங்கு இராமனைக் காண்கிறான் பரதன். பரதனின் கோலம் கண்ட இலக்குவனனும் தான் பேசியதை எண்ணி வெட்கம் கொள்கிறான். தசரதனின் மரணத்தைத் தெரிவித்த பரதனை எண்ணி இரங்கல் கொள்கிறான் இராமன். தசரதனுக்கு நீர்க்கடன் செய்கின்றான் இராமன். சீதையைக் கண்ட பரதன் தன் கைகளில் தன் முகம் புதைத்து அழுகின்றான். பரதன் யாதொரு செயலைச் செய்யாவிடினும் தன்னைச் சுற்றியிருப்போர் அவமதிப்பினும் தன் பண்பின் மேம்பாட்டால் பண்பாளனாக மிளிர்கிறான்.

### பரதனின் சூளுரை

இராமனைக் கண்ட பரதன் மீண்டும் புத்துணர்ச்சியுடன் அயோத்திக்கு அழைக்கிறான். ஆனால் இராமனோ தந்தைக்குக் கொடுத்த வாக்கினை எண்ணி வர மறுக்கிறான். தன் தாயான கைகேயியின் பாவச் செயலுக்கு உண்டான பாவ விமோசனமாக இராமனைப் பரதன் அழைத்தாலும் அழைப்புக்கு மறுக்கிறான் இராமன். உடனே பரதன்,

**ஏழிரண்டாண்டில்ஐயநீ**
**நாமநீர்நெடுநகர்நண்ணிநானிலம்**
**கோமுறைபுரிகிலையென்னிற்கூறெரி**
**சாமிதுசரதநின்னாணை**
**(அயோத்தியாகாண்டம், திருவடிசூட்டுப்படலம், பா.எண் - 133)**

எனப் பதினான்கு ஆண்டில் இராமன் வரவில்லை எனில் தான் தீ எரிபடுவதாக சூளுரை செய்கிறான். அதற்கு உடன்பட்ட இராமன் கானகம் செல்லத் தயாராகின்றான். அதன்பின் பரதன் தன் அண்ணன்மீது கொண்ட அன்பின் அடையாளமாக இராமனின்

பாதரட்சையைப் பெற வேண்டுகிறான். அதனை மனமுவந்து கொடுத்த இராமன், சீதை இலக்குவனனுடன் காட்டிற்குச் செல்ல பரதன் அயோத்தி செல்லாது அதன் அருகில் உள்ள நந்தியம்பதியில் தங்குகிறான்.

**ராமனுடன் மன வாழ்வு வாழும் பரதன்**

நந்தியம்பதியில் பரதன் இராமனின் வரவு மட்டுமே குறிக்கோளாகக்கொண்டு வாழ்ந்தான். இவனது செயலானது இராமனை ஒத்தே காணப்பட்டது. கானகத்தில் கிடைக்கும் காய்கள், பழங்களை உண்டும், புல் படுக்கையில் உறங்கியும், இரவு பகல் "இராமா' எனும் உச்சரிப்புடனும், ஐம்பொறி அடக்கி, மனக்கலக்கத்துடன் இராமன் வரும் திசைநோக்கியே கிடந்தான். இதனை,

**நோக்கில் தென்திசை அல்லாது நோக்குறான்**
**ஏக்குற்று, ஏக்குற்று, இரவி குலத்து உளான்**
**வாக்கிற்பொய்யான்: வரும், வரும்'**
**என்று உயிர்**
**போக்கிப்போக்கி, உழக்கும் பொருமலான்**
***(யுத்தகாண்டம், மீட்சிப்படலம், பா.எண்-208)***

என்ற பாடலில் கம்பர் வடித்துக் காட்டுகிறார்.

**வாக்கு தவறாதவன்**

கானகம் சென்ற இராமன், இராவணவதம் முடித்த பின்பு அயோத்தி திரும்ப ஆயத்தமாகின்றான். "சொன்னகாலம் தவறிவிட்டால் பரதன் தீயெரிபடுவான்" - எனும் சூளுரை இராமனுக்கு நினைவிற்கு வருகிறது. தான் விரைவாகச் செல்ல வாகனம் கேட்கிறான் இராமன். அவனுக்கு புட்பக விமானம் கொடுத்தாருக்கு நன்றி கூறியவுடன் உடனே புறப்படுகின்றான் இராமன். நந்தியம்பதியில் பரதன், இராமன் சொன்ன நாளில் வராமை குறித்து சோகத்தில் நிற்கிறான். "இராமனுக்கு ஏதேனும் ஆபத்து நிகழ்ந்திருக்குமோ!" - எனும் அச்சம் அவனை வாட்டுகிறது. சத்ருக்கனனை அழைத்த பரதன் ஆட்சியை அவனை ஏற்க வேண்டுகின்றான். அதன் பின் அவனை எரி அமைக்க பணிக்கிறான். கோசலை மற்றும் அங்குள்ளோர் யாருடைய சொல்லுக்கும் செவி சாய்க்காத பரதன் தீயை வலம் வரத் தொடங்குகின்றான். பரதன் வாக்கு தவறாதவன் என்பதை ஏற்கனவே அறிந்திருந்த இராமன், அனுமனை விரைந்து செல்லப் பணிக்கிறான். அனுமனும்,

**ஐயன்வந்தனன்ஆரியன்வந்தனன்**
***(யுத்தகாண்டம், மீட்சிப்படலம், பா.எண் -240;)***

என்ற உரக்கக் கூறியவண்ணம் ஆகாய மார்க்கமாக வந்திறங்கித் தீயை அவித்தனன். வியப்படைந்த பரதனிடம், அனுமன் இராமனின் அடையாள மோதிரத்தைக் காண்பிக்கின்றான். மகிழ்ந்த பரதன் அனுமனுக்குப் பரிசளிக்கின்றான்.

**இராமன் வியந்த பரதன்**

பரத்துவாசனுடன் புட்பக விமானத்தில் இராமன், சீதை இலக்குவனனுடன் வந்திறங்குகிறான். உச்சி முகந்த இராமன் பரதனின் அன்புள்ளத்தை எண்ணி மகிழ்கின்றான். பரதனின் ஏவலில் வசிட்டன் வர பட்டாபிஷேகத்திற்கு ஏற்பாடு செய்யப்படுகிறது. பரதனுக்கு இளவரசு பட்டத்தை இராமன் வழங்கி முடி சூட்டுகிறான். இத்துணை நாட்களும் பரதன் வாழ்ந்த வாழ்வை நேரில் கண்ட இராமன் பரதனின் பண்பைக் கண்டு வியப்பில் ஆழ்ந்தான். பரதன் பண்பைப் போற்றியவர்கள் மகிழ்ச்சியின் வெளிப்பாடாக மற்றுமின்றி பிரியும் தருணங்களிலும் உண்டாகும் மெய்ப்பாடு ஆரத்தழுவுதல் ஆகும். இத்தகு தழுவல்களைப் பண்பின் பொருட்டு பரதன் பெற்றுள்ள திறம் போற்றுதற்குரியது.

பரதன் தசரதனின் ஆணைக்கு இணங்க கேகய நாட்டிற்குப் புறப்படும்போது இராமனிடமிருந்து பிரிகின்றான் பரதன். அப்போது, பன்னு தாரைகள் தரத் தொழுதெழும் பரதனைப் பொன்னின் மார்பு உறவணைத்துஉயிர் உறப்புல்லினன் தன்னையத் தாதை முன் தழுவினான் (பாலகாண்டம், எதிர்கொள்படலம், பா.எண் - 26) என இராமனிடம் தந்தையை ஒத்த தழுவுதலைப்பெறுகிறான்.

பதினான்கு ஆண்டுகள் வனவாசம் முடிந்த பின் நந்தியம்பதியில், பரதனைக் கண்ட இராமன் கன்று காண் கறவை என,

**தழுவினனின்ற காலைத் தத் திவீழருவிகாலும்**
**விழுமலர்க்கண்ணீர் மூரிவெள்ளத்தான் முருகின்செவ்வி**
**வழுவுறப்பின்னி மூசுமாண்டசடையின்மாலை**
**கழுவினனுச்சி மோந்துகன்று காண்கறவையன்னான்**
**(யுத்தகாண்டம், மீட்சிப்படலம், பா.எண்-346)**

எனத் ஆரத் தழுவுகின்றான். ஈண்டு கன்றனைய பரதன் நின்ற காட்சியைக் கம்பர் விரித்திருக்கிறார்.

கைகேயியின் செய்கையால் இராமனுக்கு முடிசூட்ட நிகழ்த்த இயலாத காரணத்தால் இலக்குவனன் பரதனை அவச்செ ாற்களால் இராமனிடம் ஏசுகின்றான். பின்னர் பரதனின் உண்மை மனநிலை அறிந்தபோதுதான் செய்த தவறுக்காக வருந்தி பரதனை இலக்குவனன் தழுவுகின்றான். இக்காட்சி,

**அயாவுயிர்த்தழு கணீரரு விமார்பிடை**
**உயாவுறத் திருவுள முருகப்புல்லினான்**
**நியாயமத்தனைக்கு மோர்நிலயமாயினான்**
**தயா முதலறத்தினைத் தழுவிய என்னவே**
**(அயோத்தியாகாண்டம், திருவடி சூட்டுப்படலம், பா.எண்-55)**

எனும் முறையில் அமைந்திருந்தது. பரதன் தன் பண்புகள் காரணமாகப் பெற்ற பரிசாகவே தழுவல்களை எடுத்துக் கொள்ளுதல் சிறப்பு.

## முடிபு

பரதன் மற்றையோரால் உதாசீனப்படுத்தப்பட்ட இடங்களிலும், தன் குணம் மாறாமலே பெருமையும் அடைகிறான். இவன் மனம் முழுதும் தன்னைத்தானே இழிவுக்குள்ளானமையை எண்ணி வருந்துவதாய் உள்ளது. அது மட்டுமின்றி மற்றுள்ளோரை இவன் எக்காரணம் கொண்டும் பாதிக்காமல் பேசுவது பரதனின் தனிப்பண்பு. எனவே தான் பரதன் தந்தையின் வாக்கைத் தட்டாமல் கேகய நாட்டிற்குச் செல்கிறான். இலக்குவனின் நாவில் இழிவுக்கு உள்ளாகி நின்ற சூழலிலும், இராமனின் தன்மையுடன் ஒத்து விளங்குபவனாக மிளிர்கிறான். உறவினைப் பேணும் தன்மையாளனான பரதன் தவறு செய்தால் பெற்ற தாயினையும் கடிந்துகொள்ளும் பண்பாளன். இறந்து போன தந்தையின் வாக்கை மதிப்பவன். தனக்கு வரும் அவமானங்களைப் பொறுத்துக் கொள்பவன். சூளுரை செய்தால் அதனின் வழிநின்று மாறாது வாழ்பவன். பதினான்கு ஆண்டுகள் இராமனுடன் மனவாழ்வு வாழும் பண்பு அவனிடம் வெளிப்படுகிறது. எனவே தான் ஆயிரம் இராமருக்கு ஒப்பானவனாக பிரதிபலிக்கிறான் பரதன்.

## துணை நூற்பட்டியல்

1. கம்பர். 2006. கம்பராமாயணம் பாலகாண்டம், அயோத்தியா காண்டம். மற்றும் யுத்தகாண்டம் வை. மு. கோபால கிருஷ்ணமாச்சாரியார் (உரை) சென்னை, உமா பதிப்பகம்.
2. ஞானசம்பந்தன். அ.ச. 1996. கம்பன் எடுத்த முத்துக்கள், சென்னை, வர்த்தமானன் பதிப்பகம்.
3. திருவள்ளுவர். 2014. திருக்குறள். சென்னை. சாரதா பதிப்பகம்.
4. கலித்தொகை. 2011. சென்னை. நியூ சென்ஞ்சுரி புக் ஹவுஸ்.
5. புறநானூறு. 2011. சென்னை. நியூ சென்ஞ்சுரி புக் ஹவுஸ்.